# <u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்ககிரி</u>

**அசல் வழக்கு எண் 135/2014**

பெயர்: **தங்கவேல்** நாள்: 14.02.2024

வா.சா.1 – 5 ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை.

வா.சா.1 – தங்கவேல் - சத்திய பிரமாணத்தின் பேரில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

<u>குறுக்கு விசாரணை தொடக்க நேரம் 02.45</u>

வா.சா.ஆ.52 முதல் வா.சா.ஆ.58 வரையிலான ஆவணங்கள் வழக்கிற்கு பின்னிட்டு குறிப்பாக எனது குறுக்கு விசாரணை நிலுவையில் இருந்தபோது பெறப்பட்ட ஆவணங்கள் என்றால், சரிதான். மேற்படி ஆவணங்கள் வழக்கிற்கு பின்னிட்டு பெறப்பட்ட ஆவணங்கள் என்பதால் அவற்றை கருத்தில்கொள்ள தேவையில்லை என்பதால் அவைகளின் அடிப்படையில் எந்த உரிமையும் வழக்கில் சொத்தில் நான் கோர இயலாது என்று சொன்னால், சரியல்ல. வா.சா.ஆ.59 கிரைய ஆவணத்தை என்ன காரணத்திற்காக தாக்கல் செய்துள்ளதாக முதல் விசாரணையில் கூறியுள்ளேனா என்றால், இல்லை. வா.சா.ஆ.59 ன்படியான கிரைய ஆவணத்தில் 5 ம் பிரதிவாதியோ அவருடைய முன்னோர்களோ தரப்பினர்களாக இல்லை. தற்போதாவது வா.சா.ஆ.59 ஆவணம் எதன் பொருட்டு தாக்கல் செய்யப்பட்டது என்பதற்கான விளக்கத்தை என்னால் கூறமுடியுமா என்றால், எனது தாத்தாவிற்கும் 5 ம் பிரதிவாதியின் தாத்தாவிற்கும் பாத்தியப்பட்ட இடத்தை 10க்கு மேற்பட்ட நபர்கள் கிரையம் வாங்கியுள்ளார்கள், அதனால் மேற்படி ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேன்.

2) வா.சா.ஆ.59 ஆவணப்படி விற்பனை செய்யப்பட்ட சொத்து வழக்கு சொத்து இல்லை. அவசியமற்ற ஆவணத்தை தாக்கல் செய்து நீதிமன்றத்தின் கவனத்தை திசை திருப்புவதற்காக வா.சா.ஆ.59 ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால், சரியல்ல. வா.சா.ஆ.60 ஆவணமும் வழக்கு சொத்திற்கு சம்மந்தப்பட்ட ஆவணம் இல்லை. வா.சா.ஆ.60 ஆவணத்தை எதற்காக தாக்கல் செய்கிறோம் என்று கூடுதல் முதல் விசாரணையில் குறிப்பிட்டு கூறவில்லை. அவசியமற்ற ஆவணத்தை தாக்கல் செய்து நீதிமன்றத்தின் கவனத்தை திசை

திருப்புவதற்காக வா.சா.ஆ.60 ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால், சரியல்ல. வா.சா.ஆ.61 முதல் வா.சா.ஆ.67 வரையிலான ஆவணங்கள் தகவல் அறியும் உரிமைச் சட்டப்படி வழங்கப்பட்டதாக உள்ளது என்றால், சரிதான். வா.சா.ஆ.61 முதல் வா.சா.ஆ.67 வரையிலான ஆவணங்களை பெறுவதற்கான விண்ணப்பத்தை யார், எப்பொழுது, யார் முன்னிலையில், எந்த வகையில் அளித்தார்கள் என்ற விபரத்தினை கூடுதல் முதல் சாட்சியத்தில் கூறியுள்ளேனா என்றால், இல்லை. தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின்கீழ் விண்ணப்பித்தற்கான ஆவணம் எதுவும் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை.

3) வா.சா.ஆ.61 முதல் வா.சா.ஆ.67 வரையிலான ஆவணங்கள் எனக்கு வழங்கப்பட்டதற்கான கடிதம் அல்லது அஞ்சல் உறை ஏதேனும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால், இல்லை. வா.சா.ஆ.61 முதல் 67 வரையிலான ஆவணங்கள் எனக்கு தனித்தனியாகத்தான் வழங்கப்பட்டது. வா.சா.ஆ.61 முதல் 67 வரையிலான ஆவணங்களை பெறுவதற்கு யாரிடம் விண்ணப்பம் செய்தேன் என்றால், சங்ககிரி கோட்டாட்சியர் அலுவலகத்தில் விண்ணப்பித்தேன். வா.சா.ஆ.61 முதல் 67 வரையிலான ஆவணங்கள் அனைத்தும் கோட்டாட்சியரின் நேர்முக உதவியாளர் வழங்கியதாகத்தான் உள்ளது என்றால், சரிதான். அவர் கோட்டாட்சியர் அலுவலகத்தின் பொது தகவல் அலுவலர் அல்ல என்று சொன்னால், அதுபற்றி எனக்கு தெரியாது. வா.சா.ஆ.61 முதல் 67 வரையிலான ஆவணங்கள் அனைத்தையும் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின்படி பெறாமல், சட்டவிரோதமாக கோட்டாட்சியர் அலுவலக நேர்முக உதவியாளரிடம் பெற்றுள்ளதால்தான், தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின்படி பெறப்பட்டதற்கான ஆவணங்கள் எதுவும் என்னால் தாக்கல் செய்ய முடியவில்லை என்று சொன்னால், சரியல்ல.

4) வா.சா.ஆ.61 ஆவணம் நாங்கள் வருவாய் கோட்டாட்சியர் முன் அளித்த ஆட்சேபனையின் நகல் என்றால், சரிதான். வா.சா.ஆ.61 ஆவணத்தில் பக்கம் 5 ல் எதிர்மனுதாரர்கள் என்று குறிப்பிட்டுள்ள இடத்தில் கையொப்பம் எதுவும் இல்லாமல் உள்ளது என்றால், சரிதான். சங்ககிரி வருவாய் கோட்டாட்சியரிடம் கொடுத்திருந்த ஆட்சேபனையில் நாங்கள் கையொப்பம் செய்திருந்தோமா என்றால்,

இல்லை. உண்மையில் சங்ககிரி கோட்டாட்சியரிடம் கொடுத்த ஆட்சேபனையின் நகலாக இருந்திருந்தால், அதில் எங்களுடைய கையொப்பம் இருந்திருக்கும் என்றாலும், மேற்படி ஆவணம் மோசடியாக பெறப்பட்ட ஆவணம் என்பதால்தான், அதில் எங்களுடைய கையொப்பம் இல்லையென்று சொன்னாலும், சரியல்ல. சங்ககிரி வருவாய் கோட்டாட்சியரிடம் ஆவணங்களை பெறுவதற்கு தபால் மூலமாக மனு கொடுத்தோம். அதற்கான ரசீதோ, மனுவோ தாக்கல் செய்யவில்லை. நான் மேற்படி ஆவணங்களை சட்டவிரோதமாக பெற்றதால்தான் அதற்கான ரசீதையோ அல்லது மனுவையோ தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால், சரியல்ல.

5 ம் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க வா.சா.1 ன் குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது.

<u>குறுக்கு விசாரணை முடிந்த நேரம் 03.08</u>

ஒப்பம்/தங்கவேல்

ஒப்பம்/திரு.ஆர்.ராதாகிருஷ்ணன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்ககிரி.